(**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**)

**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, MADURAI.**

**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**

**SESSIONS CASE NO. 387/2019 அ.சா.4**

Name : **திரு. அருணாச்சலம்**

Father's name :

Village :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.2026.

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். )**

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் தற்போது அவனியாபுரம் செம்பூரணி கரையில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இறந்துபோன வினோத் என்பவரை எனக்கு தெரியும். வினோத்தின் தாயார் அவரது வீட்டிலிருந்து அதிகாலை 03.00 மணிக்கு அழுதுகொண்டே ரோட்டு பக்கம் வந்தார், அழுகை சத்தம் கேட்டு நாங்கள் சென்று பார்த்தபோது வினோத்குமார் அடிபட்டு கிடந்தார். நாங்கள் கீழே கிடந்த வினோத்குமாரை ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பி வைத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் ).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் போலிஸ் விசாரணையில் கடந்த 13.07.2019 ம் தேதியன்று அதிகாலை 03.00 மணியளவில் இறந்துபோன வினோத்தின் தாயாரின் அலறல் சத்தம் கேட்டு வீட்டில் போய் பார்த்தபோது ஆஜர் எதிரி ஒரு உருட்டுக்கட்டையுடன் திட்டிக்கொண்டே வினோத்தின் வீட்டின் உள்ளேயிருந்து வந்தார் என்றும், நாங்கள் போய் உள்ளே சென்று பார்த்தபோது மேற்படி வினோத் என்பவர் இரத்தக்காயத்துடன் கிடந்தார் என்றும் கூறிவிட்டு அதன்பிறகு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை - இல்லை.**

Sd/- அருணாச்சலம்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH

Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.06.15 07:00:19 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.